**மார்ச் – 30**

**"இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்?" - 2பேது 3 : 11**

தேவனுக்கு ஒத்தவர்களாயிருக்கும் நிலையிலுள்ளவர்கள் நிச்சயமாக ஏதாவதொரு கெடுதி விளைவிக்கக்கூடிய வீண் பேச்சையோ, ஏதாவதொரு அசுத்தமான அல்லது பரிசுத்தமில்லாத சம்பாஷணையையோ, ஏதாவதொரு துரோகமுள்ள அல்லது கலக மூட்டக்கூடிய வார்த்தைகளையோ பேச மாட்டார்கள். கிறிஸ்துவின் நாமத்தை உத்தமமும் உண்மையுமாய் சொல்லுகிறவர்களிடமிருந்து இப்படிப்பட்ட காரியங்கள் தூரத் தள்ளிப் போடப்படுவதாக. ஒவ்வொரு நாளும் நமது கர்த்தரோடு நமது கணக்கைத் தீர்த்துக் கொள்ள ஞாபகமுள்ளவர்களாயிருப்போமாக. மனஸ்தாபப்படாததும் அதன் பலனாய் மன்னிக்கப்படாததுமான உபயோகமற்ற வார்த்தைகளின் ஒரு ஜாபிதாவும் நமக்கு விரோதமாக எதிர்த்து நிற்காமலிருக்க நிச்சயமுள்ளவர்களாய் இருப்போமாக. ஒவ்வொரு நாளும் தேவனுக்குக் கணக்கொப்புவித்து, அடுத்து வரும் ஒவ்வொரு நாளுக்கும் இதைவிட அதிகமான மேற்கொள்ளும் சக்தி கிடைக்க அவருடைய கிருபையை நாடினோமானால், நாம் அவருக்குப் பிரியமும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவர்களாயுமிருக்கிறோம் என்ற நம்முடைய ஆவிகளுடனே அவருடைய பரிசுத்த ஆவியின் சாட்சியை உடையதாயிருந்து, நியாயத்தீர்ப்பில் குற்றவாளி இல்லை என்று கூறப்பட்டு கிறிஸ்துவின் மூலமாகத் தேவனுக்கு முன்பாக உத்தமராக நிற்போம்.

**-Z '96, 33 (R 1937).**

இப்பொழுது இருக்கிற பொல்லாத காரியங்களின் ஒழுங்கு அழிந்து போதலையும், அதைத் தொடர்ந்து நல்ல காரியங்களின் ஒழுங்கு ஏற்படுவதையும் குறித்த சீரிய யோசனை, பரிசுத்தமும் நீதியுமுள்ள ஜீவியம் ஜீவிக்க ஒரு சக்தி வாய்ந்த தூண்டுதலாக அமைகிறது. இந்த அழிவில் நாம் சிக்கிக் கொள்ளாமலிருப்பதற்காக நீதியுள்ள ஜீவியம் புதிய காரியங்களின் ஒழுங்கில் ஒரு பாகமாக இருக்க பரிசுத்த ஜீவியம். அதற்கென்று மனுக்குலத்துக்கு ஆசிர்வாதங்களைக் கொடுக்கும் நிர்வாகிகளாக்க நமது நீதியும் அன்பும் நம்மைத் தகுதியாக்கும். **- P '33, 46.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

சங் 46:2-9; ஏசா 2:19,21; எரே 25:31-38; தானி 12:1; மத் 24:35; 2பேது 3:7,10,12; வெளி 6:14-17; 20:11; 21:1; எபி 12:28; 2பேது 1:15; 2பேது 3:14; பிலி 2:15.

**கோபுர வாசிப்பு : Z '15, 227 (R 5735).**

**வினாக்கள் :** இந்த வசனம் சம்பந்தமாக இந்த வார அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவற்றின் பலன்கள் என்ன?